18.01.2024

**SC No**. 580 / 2018 **PW**.3. திரு.நவீன்

எதிரி ஆஜர்.

**இந்நீதிமன்ற Crl.MP. No.864 /2022, நாள் 12.08.2022 உத்தரவின் படி சாட்சி மீண்டும் வரவழைக்கப்பட்டு, எதிரி தரப்பில் குறுக்குவிசாரணை செய்ய அனுமதிக்கப்பட்டார்.**

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை :**

எனக்கு எதிரியுடன் பழக்கமோ, நேரடியாகவோ தெரியாது என்றால் சரிதான். சம்பவ தேதியில் அந்த கல்லூரியில் நான் படிப்பதற்கான அடையாள அட்டையோ, அன்றைய தினம் நான் கல்லூரிக்கு வந்திருந்தேன் என்பதற்கான வருகை படுவேடு எதையும் போலிசார் விசாரணையின் போது நான் கொடுக்கவில்லை. சம்பவம் பற்றி எனக்கு நேரடியாகத் தெரியாது என்றால் சரியல்ல. இதழியல்துறையின் துறை தலைவர் அசா1, எனக்கு நன்கு பரிட்சயம் ஆன நபர் என்றால் சரிதான். பொதுவாக இதழியல்துறையில் மேற்படிப்பு படிக்க வேண்டும் என்றால் துறைத்தலைவரின் பரிந்துரைக் கடிதம் தேவைப்படும் என்றால் சரியல்ல. சம்பவ சமயத்தில் நான் முதலாம் ஆண்டு படித்த போது இதழியல்துறையின் வகுப்பறை கல்லூரியில் முதல் தளத்தில் இருந்தது. சம்பவம் நடந்ததததாகச் சொல்லப்படும் அறையும் முதல் தளத்தில் தான் உள்ளது என்றால் சரியல்ல. சம்பவ தினத்தில் சுமார் எத்தனை நபர்கள் வெளியாட்கள் இருந்தார்கள் என்றும் எத்தனை பேர் வகுப்பிற்கு வந்திருந்தார்கள் என்றும் சரியாக ஞாபகம் இல்லை. நான் பார்த்ததாகச் சொல்லப்படும் சம்பவ நேரத்தில் நான் சம்பவத்தை தடுக்க ஏதேனும் முயற்சி செய்தேனா என்றால் இல்லை. நான் சத்தம் கேட்டு சம்பவ இடத்திற்குச் செல்வதற்கு முன்பு அங்கு என்ன நடந்தது என்று எனக்கத் தெரியாது என்றால் சரிதான். நான் அசா1 ஐ தூக்கி ஆஸ்பத்ரிக்குக் கொண்டு செல்ல முயற்சி செய்யவில்லை. முதலாம் ஆண்டு படித்த கால கட்டத்தில் எங்கள் துறையின்

வழிகாட்டுதலின் பேரில் முன்னணி நிறுவனங்களக்கு internship ல் செல்வோம் என்றால் சரிதான். அதேபோல், தேர்வுகளில் மதிப்பெண் வாங்குவதும் துறைத்தலைவரின் அதிகாரத்திற்கு உட்பட்டது என்றால் சரியல்ல. சம்பவம் நடந்ததாகச் சொல்லப்படும் தேதியில் வேலை வாய்ப்பு முகாம் நடைபெற்றதால் அங்கு நிறைய ஆசிரியர்கள் மற்றும் மாணவர்கள் அங்கு இருந்தார்கள். சுமார் 50 மாணவர்கள் இருந்திருப்பார்களா என்றால் ஞாபகம் இல்லை. ஆனால் கூட்டமாக இருந்தார்கள். சுமார் 50,100 பேர் இருந்திருப்பார்கள். அவர்கள் எல்லாரக்கும் சம்பவம் பற்றி தெரியும் என்றால் ஞாபகம் இல்லை. அதன் பிறகு நான் அசா1 ஐப் பார்த்து பேசினேனா என்றால் அவர் வகுப்பிற்கு வந்த பிறகு பார்த்து பேசினோம், நான் அசா1 ஐ மருத்துவமனைக்குச் சென்று பார்த்தேனா என்றால் எங்களைப் பார்க்கவிடவில்லை. அசா1 ஐப் பார்க்க நான் மருத்துவமனைக்குச் சென்றேன். சம்பவம் தொடர்பாக நான் தனியாக புகார் எதுவும் அளிக்கவில்லை. வழக்கு சம்பந்தமாக எந்த வருடம் எங்கு வைத்து எந்த போலிஸ் அதிகாரி என்னை விசாரணை செய்தார் என்றால் 2017 ம் வருடம் விசாரணை செய்தார்கள். Students 4 பேர் இருந்தோம். கல்லூரியில் வைத்து சம்பவம் நடந்த அன்று மாலை போலிசார் விசாரித்தார்கள். நான் அந்த கல்லூரியில் படித்துக்கொண்டிருப்பதற்கான ஆவணங்களை கல்லூரி அலுவலகத்தில் இருந்து கைப்பற்றினார்கள். அவ்வாறு ஆவணங்கள் கைப்பற்றும்போது அத்தாட்சி மகஜர் தயார் செய்து கையொப்பம் வாங்கினார்களா என்றால் ஞாபகம் இல்லை. ஆனால் அத்தாட்சி மகஜர் தயார் செய்தார்களா என்றால் ஞாபகம் இல்லை. எங்கள் வருகைப் பதிவேடு எதும் கைப்பற்றினார்களா என்றால் இல்லை. அந்த கல்லூரியில் நான் படிப்பதற்கான admission register எதுவும் கைப்பற்றினார்களா என்றால் இல்லை. நான் முதல் விசாரணையில் சொன்னது போல், சொன்ன விதத்தில் எந்த சம்பவமும் நடைபெறவில்லை என்றும் எதிரி எந்த சம்பவத்திலும் ஈடுபடவில்லை என்றும் நான் சம்பவ இடத்தில் இல்லை என்றும் எதிரியை சம்பவ இடத்தில்

பிடிக்கவில்லை என்றும் சொன்னால் சரியல்ல. எனது ஆடையில் இரத்தம் எதுவும் படவில்லை. நான் அந்த கல்லூரியில் படிக்கவில்லை என்றும் நான் நான் அந்த கல்லூயின் மாணவர் இல்லை என்றும் அசா1 ன் வேண்டுகோளின் பேரில் நான் பின்னிட்டு இந்த வழக்கில் சாட்சியாக சேர்க்கப்பட்டுள்ளேன் என்றால் சரியல்ல. அசா1 மற்றும் போலிசார் சொல்லிக்கொடுத்தவாறு முதல் விசாரணையில் நடக்காத சம்பவத்தைப் பார்த்ததாகச் சொல்லியுள்ளேன் என்றால் சரியல்ல. அசா1 ன் தயவு வேண்டும் என்பதற்காக அசா1 க்கு ஆதரவாக உண்மைக்குப் புறம்பாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு "சரி" என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

அமர்வு நீதிபதி,
மகளிர் நீதிமன்றம்,
மதுரை